Article Date	Headline / Summary	Publication
09 Oct 2026	பண இழப்பைத் தடுக்கும் நீண்டகால மூன்றாம் தரப்புக் காப்பீடு... ஏன் கட்டாயம்?	Vikatan

பண இழப்பைத் தடுக்கும் நீண்டகால மூன்றாம் தரப்புக் காப்பீடு... ஏன் கட்டாயம்?

இந்தியாவில் நீங்கள் ஒரு மோட்டார் வாகனத்தை வைத்திருந்தால், மோட்டார் வாகனச் சட்டம், 1988-ன் கீழ் மூன்றாம் தரப்பு மோட்டார் காப்பீடு (Third Party Motor insurance) எடுத்திருப்பது கட்டாயம். இந்தக் காப்பீடு, சட்டப்படியான காப்பீடு என்றும் அழைக்கப்படுகிறது. இது வெறும் சட்டப்பூர்வ தேவையாக மட்டுமல்லாமல், காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் மூலம் மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் உடல் காயம், உயிரிழப்பு அல்லது சொத்து சேதம் தொடர்பான சட்டப்பூர்வ பொறுப்பிலிருந்து வாகன உரிமையாளர்களைப் பாதுகாக்கும் ஒரு சட்டப்பூர்வ காப்பீடாகவும் செயல்படுகிறது.

சமீபத்திய நாடாளுமன்ற அறிக்கையின்படி (மார்ச் 2026 நிலவரப்படி) VAHAN தரவுத்தளத்தில் உள்ள வாகனங்களின் பதிவு நிலையை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது, இந்தியச் சாலைகளில் தற்போது இயங்கும் வாகனங்களில் கிட்டத்தட்ட 45% வாகனங்களுக்கு காப்பீடு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது, அனைவருக்கும் நிதிப் பொறுப்புணர்வையும் பாதுகாப்பான சாலைகளையும் உறுதி செய்வதற்காக, கடுமையான சட்ட அமலாக்கமும் அதிகமான விழிப்புணர்வும் அவசர மாகத் தேவை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மூன்றாம் தரப்புக் காப்பீட்டு விதிமுறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை சமீபத்திய உச்ச நீதிமன்ற ஆலோசனையும் வலியுறுத்தி யுள்ளது. இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்குக் கட்டாயமான மூன்றாம் தரப்புக் காப்பீட்டை முறையாகப் பின்பற்றவேண்டிய அவசியத்தை இந்த ஆலோசனை எடுத்துரைக்கிறது.